**சார்பு நீதிமன்றம், ஓமலூர்**

SC.No.56/2023

நாள்: 27.03.2026

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 27.03.2026ம் நாளாகிய இன்று திருமதி.சித்ரா, கண்காணிப்பாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| சாட்சி: | அ.சா.7 | ஜாதி | :----------- |
| பெயர் | தங்கமணி | தொழில் | |
| த/பெ. | | மதம் | |
| கிராமம் | | வயது | |
| வட்டம் | | | |

**(Accused 1 to 3, 5 and 6 present)**

**முதல் விசாரணை:-**

1. நான் தற்போது பாப்பம்பாடி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலக பணி செய்து வருகிறேன். நான் கடந்த 2021ம் வருடத்தில் கோட்டமேட்டுப்பட்டியில் கிராம நிர்வாக அலுவலக பணி செய்து வந்தேன். 2021ம் வருடம் நவம்பர் அல்லது டிசம்பர் மாதத்தில் ஓமலூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் என்னை தொலைப்பேசி மூலம் தொடர்பு கொண்டு குறைந்த விலைக்கு நகையை விற்பதாக சொல்லி ஏமாற்றிய சிலரை பிடித்து வைத்திருப்பதாகவும் அந்த இடத்தை பார்வையிட்டு மகசர் தயார் செய்யபோவதாகவும் எனவே சாட்சியாக இருக்கும்படியும் என்னை அழைத்தார்.

2. நான் அன்று இரவு சுமார் 9 மணிக்கு தேசிய நெடுஞ்சாலையில் உள்ள ஆர்.சி.செட்டிப்பட்டி அம்மன் கார் ஷோரூம் மற்றும் ஓட்டல் அருகே சென்றேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். ஓமலூர் காவல் ஆய்வாளர் என் முன்னிலையில் மகசர் தயார் செய்து வரைபடம் வரைந்தார். அதில் நானும், கிராம நிர்வாக உதவியாளர் அந்த பார்வை மகசர் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் போலீசார் பிடித்து வைத்திருந்த நபர்களில் ஒருவரான உதயசங்கர் என்பவரை விசாரிக்க போவதாகவும் அதற்கு சாட்சியாக இருக்கும்படியும் போலீசார் என்னையும், கிராம நிர்வாக உதவியாளர் குமார் என்பவரையும் கேட்டார்கள்.

3. நாங்கள் இருவரும் சம்மதத்தின்பேரில் எங்கள் முன்னிலையில் உதயசங்கர் என்பவரை காவல் நிலையில் வைத்து அதிகாலை சுமார் 4 மணிக்கு விசாரித்து உதயசங்கர் செய்த சங்கதிகளை அவர் சொல்ல சொல்ல விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். தற்போது

என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். பின்னர் அவரிடமிருந்து கருப்பு நிற Hero honda splendor வாகனத்தை எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் போலீசார் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதிக்கப்பட்டதன்பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. போலீசார் விசாரணையில் கடந்த 01.11.2021ம் தேதி இரவு 8 மணிக்கு பார்வை மகசர் தயார் செய்ததாக சொல்லிவிட்டு தற்போது 5 வருடங்கள் ஆனதால் ஞாபக மறதியின் காரணமாக இரவு 9 மணிக்கு பார்வை மகசர் தயார் செய்ததா சொல்கிறேன் என்றால் இருக்கலாம். அதேபோல் 02.11.2021ம் தேதி அதிகாலை 1 மணிக்கு ஓமலூர் காவல் நிலைய குற்ற எண் 808/2021 என்ற வழக்கின் எதிரி உதயசங்கர் என்பவரை கைது செய்து அவர் தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எங்கள் முன்னிலையில் பதிவு செய்து அவரிடமிருந்து TN 30 AE 5065 என்ற பதிவெண் கொண்ட Hero honda super splendor வாகனத்தை விடியற்காலை 2.15 மணிக்கு ஆஜர்படுத்த கைப்பற்றுதல் மகசரில் என் முன்னிலையிலும், கிராம நிர்வாக உதவியாளர் குமார் முன்னிலையிலும் கைப்பற்றியதாக போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது 5 வருடங்கள் ஆனதால் ஞாபக மறதியின் காரணமாக மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஞாபகம் இல்லை.

**<u>1, 2, 5 மற்றும் 6 ஆகிய எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு 3ம் எதிரி தரப்பில் தனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது</u>**.

1. நான் இந்த வழக்கு சம்பந்தமாக ஓமலூர் காவல் நிலையத்திற்கு 2, 3 முறை சென்றிருப்பேனா என்றால் ஆமாம். நான் 2, 3 முறை ஓமலூர் காவல் நிலையம் சென்றபோது கிராம உதவியாளரையும் உடன் அழைத்து சென்றேன் என்றால் ஆமாம். நான் 2, 3முறை காவல் நிலையம் சென்றபோது என்னை யார் விசாரித்தார் என்றால் ஆய்வாளர் தான் விசாரித்தார். என்னைவிசாரித்தபோது அதனை வாக்குமூலமாக எழுதி கொண்டார் என்றால் ஆமாம். அதுபோல எனது கிராம உதவியாளரையும் விசாரித்து ஆய்வாளர் அதனை வாக்குமூலமாக எழுதி கொண்டார் என்றால் ஆமாம். காவல் ஆய்வாளர் என்னிடம் காவல் நிலையம் நான் சென்றிந்த சமயத்தில் எத்தனை கையெழுத்து வாங்கினார்கள் என்றால் 4 கையெழுத்துக்கள் வாங்கினார்கள்.

2. நான் கையெழுத்து செய்த சமயங்களில் எனது கிராம உதவியாளரிடமும் ஆய்வாளர் எனது கையெழுத்துக்கு கீழ் 4 முறையும் அவரது கையொப்பத்தையும் பெற்றார் என்றால் ஆமாம்.

தற்போது என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.4 கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்தும், அ.சா.ஆ.3 உள்ள கையெழுத்தும் காவல் நிலையத்தில் வைத்து என்னிடமும், எனது கிராம உதவியாளர் குமாரிடமும் பெறப்பட்டது என்றால் ஆமாம். நான் சொல்வது போல உதயசங்கரை போலீசார் கைது செய்யவில்லை என்றாலும், அவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், அவரிடமிருந்து எந்த வாகனத்தையும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. நானும், கிராம உதவியாளர் குமாரும் அரசு ஊழியர் என்பதால் போலீசார் காவல் நிலையத்தில் தயார் செய்து வைத்திருந்த ஆவணங்களில் எங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில்வைத்து கையொப்பம் வாங்கினார்கள்.

3. ஆனால் மேற்கண்ட ஆவணங்களை தயார் செய்துதான் கையொப்பம் வாங்கினார்கள். நான் சொல்வதுபோல நான் எதனையும் பாக்கவில்லைஎன்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், நான் எதனையும் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. உதயசங்கர் Hero honda splendor வாகனத்தை ஆஜர் படுத்தியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. போலீசார் எனக்கு சம்மன் கொடுத்து விசாரிக்க வில்லை என்றால் சரிதான். நான் மேற்கண்ட விசாரணைக்கு செல்வது குறித்து எனது அலுவலகத்தில் உள்ள முகாம் Registerல் குறித்து வைக்கவில்லை என்றால் சரிதான். எனது மேல் அதிகாரியிடம் விசாரணைக்கு செல்வதற்காக எழுத்து பூர்வமாக அனுமதி வாங்கவில்லை என்றால் சரிதான்.

4. நான் கையெழுத்து செய்த தாள்களை போலீசார் எத்தனை நகல் எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவ இடத்தை போலீசாருக்கு நான் அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான். போலி நகையை வைத்து ஏமாற்றிய நபர்களை பிடித்தது குறித்து போலீசார் சொல்லிதான் தெரியும் என்றாலும், எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரிதான். போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி சொன்ன சங்கதிகள் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன் கையொப்பம் இடப்பட்டது.

(ஒப்பம்/-த.மாலதி),
உதவி அமர்வு நீதிபதி,
ஓமலூர்.

**சார்பு நீதிமன்றம், ஓமலூர்**

SC.No.56/2023

நாள்: 27.03.2026

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 27.03.2026ம் நாளாகிய இன்று திருமதி.சித்ரா, கண்காணிப்பாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| சாட்சி: | அ.சா.8 | ஜாதி | :----------- |
| பெயர் | குமார் | தொழில் | |
| த/பெ. | | மதம் | |
| கிராமம் | | வயது | |
| வட்டம் | | | |

**(Accused 1 to 3, 5 and 6 present)**

முதல் விசாரணை:–

1. நான் தற்போது கோட்டமேட்டுப்பட்டியில் கிராமத்தில் கிராம நிர்வாக உதவியாளராக பணி செய்து வருகிறேன். நான் கடந்த 2021ம் வருடத்தில் கோட்டமேட்டுப்பட்டியில் கிராம உதவியாளராக பணி செய்து வந்தேன். கடந்த 01.11.2021ம் தேதி ஓமலூர் காவல் நிலைய போலீசார் எனது கிராம முன்சீப்பை தொலைப்பேசி மூலம் தொடர்பு கொண்டு நகையை விற்பதாக சொல்லி ஏமாற்றிய சிலரை பிடித்து வைத்திருப்பதாகவும் அவர்களை விசாரிப்பதற்கு வரும்படியும் அழைத்தார்கள். நானும், கிராம நிர்வாக அலுவலரும் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள ஒரு கார் கம்பெனிக்கு அருகில் உள்ள ஆனந்த பவன் ஓட்டல் அருகே சென்றோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான்.

2. போலீசார் அந்த இடத்தை பார்வையிடும்போது நானும், கிராம நிர்வாக அலுவலரும் உடன் இருந்ததற்காக எங்களிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள். போலீசார் அந்த இடத்தை பார்வையிட்டு மகசர் தயார் செய்தார்கள் மற்றும் அந்த இடத்தில் உள்ள கார் கம்பெனி, ஆனந்த பவன் ஓட்டல், தேசிய நெடுஞ்சாலை ஆகியவைகளை மார்க் செய்து கொண்டார்கள். பின்னர் எங்களிடம் பார்வை மகசரில் சாட்சி கையொப்பம் வாங்கினார்கள். அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்பட்டிருக்கிறது. பின்னர் மறுநாள் அதிகாலை எங்களை காவல்நிலையத்திற்கு வரச்சொன்னார்கள் நேரம் நினைவில்லை. நாங்கள் காவல் நிலையம் சென்றோம் .அங்கு எங்கள் முன்னிலையில் உதயசங்கர் என்பவரை விசாரித்து அவர் செய்த

சம்பவங்களை அவர் சொல்ல சொல்ல எழுதி அதில் என்னிடமும், கிராம முன்சீப்பிடமும் கையொப்பம் வாங்கினார்கள்.

3. தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையொப்பம் அப்போது நான் போட்டுக்கொடுத்ததுதான். பின்னர் உதயசங்கர் எடுத்து ஆஜர்படுத்திய Hero honda வாகனத்தை தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் அந்த கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். எனக்கு முன்னால் கிராம முன்சீப் கையொப்பம் செய்தார். அந்த கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அ.சா.ஆ.4ஆக குறியீடு செய்யப்பட்டிருக்கிறது. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1, 2, 5 மற்றும் 6 ஆகிய எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு 3ம் எதிரி தரப்பில் தனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.</u>

1. போலீசார் கிராம முன்சீப்பை தொலைப்பேசி மூலமாக அழைத்தது குறித்து போலீசார் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக காவல் நிலையத்திற்கு எத்தனை முறை சென்றேன் என்றால் ஒரேமுறைதான் சென்றேன். என்னோடு கிராம முன்சீப் வந்தாரா என்றால் ஆமாம். நான் காவல் நிலையத்தில் கையொப்பம் போடும்போது 6, 7 மணி இருக்குமா என்றால் நினைவில்லை. வெளிச்சம் வந்துவிட்டதா என்றால் நினைவில்லை. காவல் நிலையத்தில் நான் கையொப்பம் செய்தபோது போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் கிராம முன்சீப்பை விசாரித்தார்கள். என்னை தனியாக விசாரிக்கவில்லை. கிராம முன்சீப் கையெழுத்து போட்ட இடங்களில் நானும் போட்டேன் என்றால் ஆமாம். அ.சா.ஆ.3 மற்றும் 4 ஆகியவைகளில் உள்ள கையெழுத்துகளை காவல் நிலையத்தில் வைத்து போட்டேனா என்றால் ஆமாம். நான் ஆனந்த பவன் ஓட்டல் அருகே சென்றதாகவும், கார் கம்பெனி அருகே சென்றதாகவும் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

சாட்சி சொன்ன சங்கதிகள் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன் கையொப்பம் இடப்பட்டது.

(ஒப்பம்/–த.மாலதி),
உதவி அமர்வு நீதிபதி,
ஓமலூர்.